RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI:10.34256/irjt22s122

# மானிடவியல் நோக்கில் ஆறுமுகம் நாவல்

க. சுரேஷ்குமார் [அ, *]

[அ] சமூக அறிவியல் மற்றும் மொழிக்கல்வித் துறை, மண்டலக் கல்வியியல் நிறுவனம், மைசூரு-570006, கர்நாடகா, இந்தியா

# Arumugam Novel in Anthropology Perspectives

K. Suresh Kumar [a, *]

[a] Department of Education in Social Sciences and Humanities, Regional Institute of Education, Mysuru-570006, Karnataka, India.

* Corresponding Author: ksureshkumar@riemysore.ac.in

Received: 02-06-2021
Revised: 07-02-2022
Accepted: 09-02-2022
Published: 25-02-2022

Check for updates

## ABSTRACT

The disciplines of Anthropology which study the human ethnicities is systematically and scientifically register the intricacies of various ethnic groups. In this article, the novel Arumugam by Imayam is seen through the parameters of literal anthropology. The primary objective of this article is that if we approach the novels and short stories which depict about the downtrodden through anthropological perspectives, it is possible that these communities can improve considerably in every respect. In order to establish this hypothesis this article is being built on the assumption that literature in general is concerned about the human societies. Through this article it is proved with evidence that if we can approach novel literature on the perspectives of the discipline literal anthropology, it is possible to understand more scientifically and clearly various ethnic groups and establish their ethnic specific behavior. Further, this article could infer that the main cause for the sufferings of the downtrodden communities is their economic backwardness. Apart from this, the article could identify and explain vividly that the down trodden communities though they have attained sophistication in culture and habits, still their status is below the general standard and the other communities are treating them and approaching them with a different yard stick.

**Keywords:** Anthropological Outlook, Weak Economy, Oppressed People, Culture.

## முன்னுரை

ஒரு சமூகத்தின் தோற்றம், வளர்ச்சி, வீழ்ச்சி, இயங்குநிலை ஆகியவற்றை அறிவதற்கும், சமூகங்கள் அறிவு நிலைகளைக் கண்டறிந்து அவற்றை எவ்வாறு தங்கள் வாழ்வியலில் பயன்படுத்திப் பல தலைமுறைகளைக் கடந்து எவ்வாறு தங்கள் வாழ்வியலில் நிறுவினார்கள் [Established] என்பதையெல்லாம் மானிடவியல் நோக்கில் ஆராய்ந்து பார்ப்பது இன்றைய இன்றியமையாத் தேவையாக இருக்கிறது. அறிவு நிலைகள் மட்டுமின்றி ஒரு சமூகம் அல்லது குழு அன்றாட வாழ்வியலில் ஏன் காலம் காலமாக நசுக்கப்படுகிறது என்பன போன்ற பிற கூறுகளையும் ஆய்வதற்கு மானிடவியல் ஆய்வுகள் பயன்படுகின்றன. இந்தக் கட்டுரை மானிடவியலை அடிப்படையாகக் கொண்டு ‘ஆறுமுகம்’ என்ற தலித் நாவலை ஆய்வு நோக்கில் பார்க்கிறது. இங்கு பறையர் என்ற இனக்குழுவில் வாழும் மக்களுக்கு ஏற்பட்ட இன்னல்கள் உற்றுநோக்கி ஆராயப்படுகிறது. ஒடுக்கப்பட்டவர்கள் பற்றிய படைப்புகள் இன்று பரவலாக வெளிவரும் நிலையில் அவற்றில் இருக்கும் பண்பாட்டுக் கூறுகள், பழக்கவழக்கக் கூறுகள், பொருளாதாரக் கூறுகள், சமூக விதிகள் பற்றிய கூறுகள் போன்றவை மானிடவியல் நோக்கில் ஆய்வு செய்யப்பட வேண்டும் என்ற அடிப்படையில் இக்கட்டுரை அமைகிறது.

“தலித்தியம் என்றால் என்ன? எனக்குத் தெரியாது. பெண்ணியம் என்றால் என்னவென்பதும் எனக்குத் தெரியாது. நவீனத்துவம், பின்- நவீனத்துவம் என்பது குறித்தெல்லாம் எனக்கு ஒன்றுமே தெரியாது. தெரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆசையும் இல்லை. கோட்பாடுகள் என்னை எழுதத் தூண்டவில்லை. நிஜ வாழ்க்கைதான் எழுதத் தூண்டியது” என்பது இமையம் அவர்களின் கருத்து. இவர் இந்தக் கருத்தை மனத்துள் கொண்டு எழுதியிருப்பதால் அவர் படைப்பில் உள்ள உண்மையின் ஊற்றுக்கண்ணை மானிடவியல் நோக்கில் ஆராய்வது பொருத்தமானதாகவும் அமையும்.

## கதைச் சுருக்கம்

தனபாக்கியம் தான் பிறந்த எட்டாம் நாள் தன் அம்மாவை இழந்து அப்பாவின் அரவணைப்பில் வளர்ந்து 15-ஆம் வயதில் திருமணம் செய்து கொடுக்கப்பட்டு 23-ஆம் வயதில் கணவனை இழக்கிறாள். தன்பாக்கியத்தின் மகன் ஆறுமுகத்திற்கு அப்போது ஏழு வயது. அவனை வளர்த்து ஆளாக்கும்போது பாலியல் கொடுமைக்கு ஆளாக, அதைக் கண்ட ஆறுமுகம் தாயைப் பிரிந்து வாழ்ந்து கிட்டத்தட்ட 8 ஆண்டுகளுக்குப் பிறகு அவனது 15, 16 வயதில் அம்மாவைக் கண்டுபிடித்து விட, எல்லாவற்றையும் இழந்துவிட்டதாகக் கருதித் தற்கொலை செய்து கொள்கிறாள் தனபாக்கியம் என்பதே நாவலின் கதைச் சுருக்கம்.

பாலியல் கொடுமைக்கு ஆளாக நேர்வதால் ஒடுக்கப்பட்ட சமூகத்தில் உள்ள ஒரு குடும்பம் எவ்வாறு சீரழிந்து போகின்றது என்பதைக் காட்டுகிறது இந்நாவல். சாதி என்ற தீய அடுக்கில் உயர்ந்தவன் என்று சொல்லப்படக் கூடியவன், பொருளாதார நிலையில் மேல்நிலையில் இருப்பவன் தன் இச்சைக்காக ஒழுக்க நெறியில் வாழும் பெண்களைச் சீரழிப்பதால் இச்சமுதாயம் தொடர்ச்சியான அநீதிகளைச் சந்தித்தும், சமூகச் சிக்கல்களை எதிர்கொண்டும், உளவியல் ரீதியான பிரச்சினைகளை வாழ்க்கை முழுவதும் சுமந்து துயரடைந்து காலம் காலமாகப் பாலியல் அடிமைகளாகவும் இருப்பதை இந்நாவல் சித்தரிக்கிறது.

## இலக்கியம் மானிடவியல் தொடர்பு

இலக்கியங்கள் சமூகத்திலிருந்துதான் பிறக்கின்றன. சமூகம் ஏற்றுக் கொண்ட, ஏற்றுக்கொள்ளாத உணர்வுகள், எண்ணங்கள், செயல்கள், கொள்கைகள், பண்பாடுகள், பழக்கவழக்கங்கள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு உணர்ச்சியூட்டப்பட்டு புனைவிலக்கியங்கள் தோன்றுகின்றன. ஆகவே இந்தப் புனைவிலக்கியங்களில் ஓரளவுக்கோ அல்லது அதிக அளவிலோ மானிடவியல் கூறுகள் இடம்பெற்றுவிடும். இலக்கியங்கள் மனிதச் சமூகத்தைப் பற்றியே பேசுகின்றன என்பதால் இலக்கிய வாசிப்புக்கு மானிடவியலைப் பயன்படுத்தும் வாய்ப்புகள் உள்ளன என்பதை ஆய்வாளர்கள் உணர்ந்துள்ளனர் (Stephen, 2017). இந்த அடிப்படையில் மானிடவியல் நோக்கில் இந்நாவலினைப் பார்ப்பதற்குப் பல கூறுகள் இருக்கின்றன. இன்று புனைவிலக்கியத்தில் ஒடுக்கப்பட்டவர்களைப் பற்றி எழுதும் போது நிச்சயமாக அவர்களது பண்பாடு, பழக்கவழக்கம், சமூகம், சமூகநிலை போன்ற பெரிய கூறுகளை விட்டுவிட்டு எழுத முடியாது என்பது உண்மை. இவை எல்லாமே மானிடவியலின் முக்கியக் கூறுகளாக இருப்பதை நாம் அறிகிறோம். மேற்கண்ட இக்கூறுகள் புனைவில் இடம்பெறும் போது அப்படைப்பு மனித எண்ணத்தை, உளவியல்களை, வாழ்வியல்களை, சூழலியல்களை, பண்பாடு, பழக்கவழக்கங்களை உயிர்ப்புடன் சமூகத்திற்குக் காட்டமுடிவதாக இருக்கும். இவ்வாறு அமையும்போது அப்படைப்பு சமூக அமைப்பு, சமூகப் பண்பாடு, பழக்கவழக்கங்கள், சமூக நிறுவனங்கள் போன்றவற்றை அளவிடவும் ஆய்ந்தறிந்து பல மானிடவியல் கூறுகளை வெளிக்கொணர்வதற்கும் வாய்ப்பாக அமையும்.

ஓர் இலக்கியப் பனுவலில் இனவரைவியல் தரவுகளை மட்டும் பட்டியலிடுவது இலக்கிய மானிடவியலின் நோக்கமன்று. இந்த இனவரைவியல் தரவுகள் எவ்வாறு சமூகப் பண்பாட்டு நிறுவனங்களைக் காட்சிப்படுத்துகின்றன என்பதைக் கண்டறிந்து அவற்றிலிருந்து தர்க்கங்களை உருவாக்குவதும் பொருள்கோள் செய்வதுமே இலக்கிய மானிடவியலின் பணியாகும் (Stephen, 2017). எனவே இலக்கியப் பனுவல்களில் காணப்படும் மானிடவியல் கூறுகளைக் கவனமாகக் கண்டறிந்து அவற்றைப் பகுப்பாய்வு செய்து பார்க்கும்போது தான் சரியான புரிதலை அடைய முடியும். மேலும்

புனைவிலக்கியத்தில் உண்மையுடன் புனைவும் இருக்கும்போது அதைக் கவனமாகக் கையாண்டு உற்று நோக்கி மானிடவியல் கூறுகளை வெளிக்கொணர்வதும் அவசியமாகிறது.

## வலுவற்ற பொருளாதார நிலையும் சிக்கல்களும்

காலம் காலமாக ஒடுக்கப்பட்டோர் பொருளாதாரத்தில் மிகமிகச் சிலரைத் தவிர அனைவரும் மிகவும் கீழ்நிலையிலேயே இருந்து வந்தனர். இத்தகையப் போக்கை நாவலில் ஆசிரியர் சுட்டிக்காட்டி அவர்களை நிலவுடைமையாளர்கள் சுரண்டுவதையும் நுட்பமாகக் காட்டுகிறார். உழைப்பு மிகச் சாதரணமாகச் சுரண்டப்படுவதால் ஏற்படும் பொருளாதாரச் சிக்கலைப் போக்க அவர்கள் உரிமையாளருக்குத் தெரியாமல் தானியங்களையும் பிற பொருட்களையும் மறைத்து எடுத்துச் செல்ல முற்படுகின்றனர். சுரண்டப்படும்போது ஒரு மனிதன் தன் பசியைப் போக்க வேறு வழியின்றிச் செய்யும் செயலை நாம் எவ்வளவு கீழாகப் பார்க்கிறோமோ அதைவிடக் கீழாகச் சுரண்டலைப் பார்க்க வேண்டும். ஆனால் இந்நிலை இல்லை. ஏனெனில் சாதி அடிப்படையில் ஒருவன் செய்வது மிகப்பெரிய தவறு என்றாலும் தவறில்லை என்பது சமூகம் கட்டமைத்துள்ள ஒரு சாதி சார்ந்த பொருளாதாரச் சுரண்டல். இதை ஒரு கொடுமையான சமூக விதி என்று சொல்வது மிகவும் பொருத்தமாக இருக்கும். இச்சுரண்டல் நிலை பொருளாதாரத்தில் அவர்களைத் தொடர்ந்து கீழ்நிலையில் வைப்பதற்கும், தாங்கள் அவர்களைச் சுரண்டி அதிகாரம் செய்து அதிகார வர்க்கம் என்னும் நிலையைத் தக்க வைத்துக்கொள்ள தந்திரமாகக் காலம் காலமாக கடைப்பிடிக்கப்பட்டு வரும் கொடிய நிலையாக இருந்து வருகிறதென்றாலும், இதை இடிப்பார் இன்றி, பசியைப் போக்கச் சிறிதளவு மறைத்து வைத்து எடுத்துச் செல்பவர்களை இழித்தும் பழித்தும், பிற கடுமையான தண்டனைகள் வழங்கியும் அச்சமூட்டித் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்வதையும் காலம் காலமாகச் சமுதாயம் பாராவண்ணமாகவே இருந்து வந்தது. இத்தகைய கொடுமையான சமூக விதிகளுக்கு உட்பட்டு வாழும் மக்களின் சுரண்டலைக் ஆசிரியர் தெளிவாகச் சுட்டிக்காட்டிச் செல்கிறார் என்று சொல்ல முடியும். மற்ற பெண்களைப் போல் மடியிலோ, சோற்றுக் குண்டானிலோ, மண்ணுக்கடியிலோ, 'ஒண்ணுக்கு வருது என்றோ' பொட்டச்சின்னு இருந்தா வெளிய வாசல போவாமியா இருப்பா?' என்றோ சொல்லிக் கொண்டுபோய் ஊருக்குப் போகும் வழியில் கடலையைக் கொட்டி மறைத்து வைக்க மாட்டாள் (Arumugam, 2020).

மேலும் இவர்கள் உருவாக்கும் சமூக விதிக்குள் பொருளாதாரச் சுரண்டல் இருக்கும், அதன் வழி பாலியல் சுரண்டல் இருக்கும், இவை அதன் வழி அவர்களின் குழுக்களுக்கு இடையே காலம் காலமாக ஒழுங்கீனமற்றவர்கள் என்ற பார்வையை ஏற்படுத்துவது ஆகும் என்பதையும் உணர முடிகிறது. தலித்துகள் மீது நடத்தப்படும் எண்ணற்ற வன்கொடுமைகள் யாவும் அரசு அரசியலமைப்பின் அடிப்படையில் அதன் கடமையைச் செய்ய முடியவில்லை என்பதையே காட்டுகின்றன. (Bhagthavathsala Bharathi, 2013) இவர்களின் பாலியல் சுரண்டலால், ஒடுக்கப்பட்டவர்களின் குடும்பம் சிதைவதையும், உளவியல் ரீதியான பிரச்சினைகளைக் காலம் முழுவதும் எதிர்கொள்வதைக்கண்டு நம் சமூகம் காலம் காலமாகப் பேசாமல் இருப்பதையும், ஒரு கொடூரமான சமூகக் கட்டமைப்பை உருவாக்கியிருப்பதையும், அரசுகளும் கண்ணை மூடிக்கொண்டிருப்பதையும் நுட்பமாகக் காட்டிச் செல்கிறார். சின்னப் பொண்ணு வாழ்க்கைச் சூழலால் விபசாரம் செய்து வாழ்ந்தாலும் அவளிடம் இருக்கும் மனிதாபிமான உணர்வாலும், பிற நல்ல குணங்களாலும், அவள் உயர்ந்தவள்தான் என்று சொல்ல முடியும். அவள் இறந்த போதும் இறப்பதற்கு முன்னரும் நடந்ததைக் கூறும்போதும் நாம் இந்தச் சமூகத்தின் கொடூரமான கட்டமைப்பை உணர முடியும்.

ஜெரி ஆல்பெர்ட்டால் பாலியல் வன்கொடுமைக்கு ஆளான தனபாக்கியம், தான் இறுதியில் தூக்கிட்டுத் தற்கொலை செய்வது வரை இறந்த நிலையில் பிணமாகவே வாழ்ந்தாள் என்பதை ஆசிரியர் தனபாக்கியம், ஆறுமுகம் வாயிலாகக் குறிப்பிடும் இடங்களில் ஒடுக்கப்பட்டவர்களின் மனநிலையை உளவியல் ரீதியாகக் காட்டி, ஒடுக்கப்பட்ட சமுதாயத்தில் பலர் இப்படித்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை உணர்த்துகிறார். என்ன வுட்டுவுட்டு நீ ஓடுன அன்னிக்குத்தான் பொம்மனாட்டியா நான் கடைசியா சோறு தின்னது, அதுக்கு மொத ராத்திரி ஒங்கூட தூங்குனதுதான் பொம்மனாட்டியா நான் கடைசியா தூங்குன தூக்கம் (Arumugam, 2020).

மேலும் சமூகம் காலம் காலமாக ஒடுக்கப்பட்டவர்களை, அவர்களின் குரலை ஒரு பொருட்டாகக் கருதவில்லையென்றும் அதற்குக் காரணம் அவர்களின் பொருளாதார நிலையே என்பதைக் காட்டுகிறார். ஆறுமுகம் தன்னைவிட்டுச் சென்ற பிறகு பித்துப் பிடித்தவள் போல ஜெரி ஆல்பெர்ட் இருக்கும் இடத்திற்கு வந்து அவனை மருத்துவமனைக்குக் கொண்டு போகும் அளவுக்குத் தாக்கினாள். அவளை விலக்கி, ஜெரி ஆல்பெர்ட்டை மீட்ட போது எல்லாவற்றையும் சொல்லி அழுது புலம்பிய போதும் யாருமே ஏனென்று கேட்டு உதவி செய்ய வரவில்லை. கூட்டமாக நின்று வேடிக்கையே பார்த்தார்கள். சமூகம் இப்படித்தான் காலம் காலமாக ஒடுக்கப்பட்ட சமுதாயத்தை வேடிக்கை பார்த்து வருகிறது என்பதையும் அதற்குக் காரணம் அவர்களின் பலமற்ற பொருளாதார நிலை என்பதைக் காட்டிப் பொருளாதார நிலையில் உயர் வர்க்கமாக இருக்கும் அனைவருமே ஒவ்வொரு நிலையிலும் பாலியல் இன்பத்துக்கான பொருளாகவே விலைபேசி வந்தார்கள் என்பதையும் காட்டுகிறார். எத்தனையோ நாயுடுகள் இவள்மேல் ஆசையும் பட்டார்கள். ஆள் விட்டும் பார்த்தார்கள் எல்லோருக்கும் 'கடலு எப்ப வத்தறது, கருவாடு எப்ப திங்கறது? பொயப்பத்த பேச்சு' என்று சொல்வாள் மேலும் நகர்மயம் அடைந்து வளர்ச்சியை நோக்கிச் செல்லும் போதும் அவர்களுக்கு எதிரான பாலியல் கொடுமைகள் குறையவில்லை என்பதை ஜெரி ஆல்பெர்ட் மூலம் காட்டுவிடுகிறார் (Arumugam, 2020).

பொருளாதார நிலையில் மேலே வந்துவிட்டால் சமூகத்தில் ஒடுக்கப்பட்டு வாழும் இழிநிலையிலிருந்து மாறிவிடலாம் என்பது ஒடுக்கப்பட்டவர்களின் மனதளவில் எப்போதுமே இருந்து வருகிறது. ஆனால் அந்த இழிநிலையை மாற்ற வாய்ப்பளிக்காத, வழிகாட்டாத முட்டுக்கட்டையாகத்தான் உடன் வாழும் பிற சமுதாயங்கள் இருக்கின்றன என்பதை ஆறுமுகம், ஆறுமுகத்தின் தாத்தா இடையேயான ஓர் உரையாடல் மூலம் அறிய முடிகின்றது. 'இந்தப் பாத நேரா ஊட்டுக்குத்தான் போவுதா?' 'ஆமாம்' 'இதுலியே திரும்பிப் போனா?' 'காட்டுக்குப் போவும்.' 'எல்லாக் காட்டுக்குமா?' 'ஆமாம்' 'நம்ப காட்டுக்கும் போவுமா?' நம்பளுக்கு காடு இல்ல! 'ஏன் இல்ல' 'ஒன்னால வாங்க முடியாதா?' எப்பிடி முடியும்? முடியுறமாரி இருந்தா அப்புறம் என்னா இருக்கு நாவலில் புனைவாக இருந்தாலும் இது ஒடுக்கப்பட்ட மக்களின் பொருளாதார நிலையாக, முன்னுக்கு வர இயலாத நிலையாக இருக்கிறது என்பதையே காட்டுகிறது (Arumugam, 2020).

## பண்பாடும் வாழ்க்கை நிலையும்

சமூகம் செயற்கையாகக் கட்டமைத்துள்ள ஒழுக்க விதிகளை ஒருவன் அல்லது ஒருத்தி பின்பற்றி வாழ்ந்தால் அவர்கள் நல்லவர்கள், ஒழுக்கமானவர்கள் என்ற பார்வையைக் கொண்ட சமூகத்தில் ஒழுக்க விதிகளுக்குள் வாழ ஆசைப்பட்டும் சூழல் அதற்கு எதிரான திசையில் மனிதர்களைக் குறிப்பாக ஒடுக்கப்பட்டோரையும் பிறரையும் தள்ளிவிடுகிறது என்பதை ஆசிரியர் நாவலில் சிந்திக்கத்தக்க வகையில் கதைமாந்தர்களை அமைத்துக் காட்டியிருக்கிறார். அதேசமயம் அந்த ஒழுக்க விதிகளுக்கு எதிரான இடமும் வாழ்க்கையைப் புரிய வைக்கும் என்பதை ஆறுமுகம் வாயிலாகக் காட்டிவிடுகிறார் ஆசிரியர். "நன்கு திட்டமிட்டு கட்டமைக்கப்பட்ட ஆரோவில்லில் ஏற்பட்ட வாழ்க்கையின் பெருங்குழப்பம் ஒன்று, ஒழுக்க விதிகளுக்கு எதிராக தன்னை அமைத்துக்கொண்ட செக்குமேட்டு நிலப்பரப்பில் தெளிவைக் கொடுப்பது வாழ்க்கையின் முரண்களில் ஒன்றாக அமைகின்றது" (Pandiyan, 2019).

நாகரிகத்தினும் உயர்ந் நிலையே பண்பாடாயினும், நாகரிகமின்றியும் பண்பாடுண்டு. (Thevaneya Paavaanar, Gna., 2009). அறிவின் மூலம் வளர்ச்சியடைந்து அதன் மூலம் பல்வேறு வசதிகளை நுகர்ந்து வாழ்வதை நாகரிகம் எனலாம். இன்று சமூகம் ஒருவரிடம் நல்ல பண்பாடு இருக்கிறதா என்று பார்ப்பதை விட்டுவிட்டு நாகரிகமாக வாழ்கிறாரா என்று பார்ப்பதிலேயே குறியாய் இருக்கிறது. இன்று பண்பாட்டின் வழி ஒருவர் போற்றப்படாமல், பலவகை வசதிகளோடு வாழ்கிறாரா அதாவது பொருளாதார பலத்தோடு வாழ்கிறாரா என்பதைப் பார்த்தே போற்றுகிறது. இந்த நிலையை அளவுகோலாக வைத்தே ஒடுக்கப்பட்ட சமுதாயம் அளவிடப்பட்டு நசுக்கப்படுகிறது என்பதை நாவல் மூலம் நுட்பமாகக் காட்டியிருக்கிறார். வெறும் பண்பாடு மட்டும் கொண்டு வாழ்வதால் ஒடுக்கப்பட்ட சமுதாயம் மீண்டுவிடாது என்பதை ஒடுக்கப்பட்டவர்களும் அறியாதவர்களும் அல்ல. அதனால்தான் கடினமாக உழைத்து ஆறுமுகத்துக்குக் கல்வி கொடுத்து அவனை நல்ல நிலைக்குக் கொண்டு வர வேண்டுமென தனபாக்கியம் விரும்புகிறாள். பண்பாட்டை வைத்துக்கொண்டு இருக்கட்டும், ஆனால் அறிவு நுகர்ச்சிக்கு வழிவிட்டு பொருளாதார

மேம்பாட்டுக்கு வழிவிட மாட்டோம் என்ற கொள்கையை ஒடுக்கப்பட்டோருக்கு எதிராகச் சமுதாயம் தொடர்ந்து வைத்துக் கொண்டே இருக்கிறது என்பதையும் காட்டுகிறார்.

இந்த நாவலில் ஒடுக்கப்பட்ட மக்களிடம் இருக்கும் உயர்ந்த பண்பாடுகளைக் காட்டும் போது அதை மிகைப்படுத்திக் காட்டாமல் அவர்களது இயல்பான வாழ்க்கைப் போக்கிலே காட்டிச் செல்கிறார். எனவே இந்தப் பண்பாடுகளை அவர்கள் எப்போதுமே உள்ளத்துள் கொண்டுதான் வாழ்க்கை நடத்துகிறார்கள் என்பதை உய்த்துணர முடிகிறது.

'உள்ளது சிதைப்போர் உளரெனப் படாஅர்' என்கிறது குறுந்தொகை (Somasundaranar, 2007). உழைத்து அதன் மூலம் வரும் பொருளில் வாழ வேண்டும் என்ற பண்பாட்டை உரைக்கிறது இது. இதை நாவலிலும் நாம் ஒடுக்கப்பட்டோர் வழி காண முடிகிறது. எவருமே பிறருடைய பொருளில் வாழ்க்கை நடத்தவில்லை. முழுக்க முழுக்கத் தங்கள் கடின உழைப்பில் வரும் பொருளிலேயே தங்கள் வாழ்க்கையை நடத்துகின்றனர்.

ஒடுக்கப்பட்டோர் என்று மிகச் சாதாரணமாக எண்ணி அவர்களை பாலியல் வன்மத்தோடு சமூகம் பார்க்கிறது, ஆயின் அவர்கள் ஒழுக்க நெறியில் வாழ்வதையே விரும்புகிறார்கள் என்பதை தனபாக்கியம் மூலம் அறிய முடிகிறது. அந்த ஒழுக்க நெறியை அடித்து உடைக்க நினைக்கும் பல்வேறு சூழலிலும் கூட ஒழுக்க நெறியைக் கைவிடாதவர்களாகத் தான் ஒடுக்கப்பட்டோர் வாழ்கிறார்கள் என்பதையும் உணர முடிகிறது. மேலும் தனபாக்கியம், மறுமணம் என்பதை நினைத்துக் கூடப் பார்க்காமல் தன் மகனைப் படிக்க வைத்து ஒழுக்க நெறியில் வளர்த்து உயர்த்த வேண்டும் என்ற உயர்குணம் உடையவளாகத்தான் இருக்கிறாள். 'கிருஷ்ணாபுரத்தாரா? 'என்னா தாத்தாவ்?' 'அடுத்து என்ன செய்யுறாப்ல திட்டம்?' 'அவன் படிக்கட்டும்பா!' இதற்காகத் தனபாக்கியம் எடுக்கும் முயற்சிகள், கல்விதான் அனைத்தையும் மாற்றும் என்பதை உணர்ந்திருக்கும் குறிக்கோள் உடையவள் என்பதைக் காட்டுகிறது (Arumugam, 2020).

பிறரைப் பற்றிக் குறைசொல்லக் கூடாது என்பதைத் தனபாக்கியம் ஆறுமுகத்துக்குக் கற்பித்தே வளர்க்கிறாள். ஜெரி ஆல்பெர்ட்டைப் பார்த்த கணம் முதலே ஆறுமுகம் அவனை விரும்பவில்லை. ஆனால் அவனது குணம் அறியாத தனபாக்கியம், ஜெரி ஆல்பெர்ட்டைப் பற்றி ஆறுமுகம் கோபமாகப் பேசும்போது அவ்வாறு பேசக்கூடாது என்றும், நீ படிக்கிற பையன் என்றும் கண்டிக்கிறாள். பிறரைப் பற்றிக் குறை பேசக் கூடாது என்னும் உயரிய பண்பு ஒடுக்கப்பட்டவர்களிடம் இயல்பாக இருப்பதை இந்த உரையாடல் மூலமும் அறிய முடிகிறது. 'புடிக்கல'. 'எதடா புடிக்கல?' 'இந்த பூனயனத்தான்.' 'ஏண்டா?' 'பூனமாரி இருக்கான்' 'தப்பு, அப்படியெல்லாம் சொல்லக் கூடாது!' (Arumugam, 2020).

ராமன் இறந்தபின் சில மாதங்களுக்குப் பிறகு மீண்டும் தன் தந்தையுடனேயே தங்கியிருக்க முடிவு செய்து பூத்துறைக்குத் திரும்ப முடிவெடுத்தாள் தனபாக்கியம். அவ்வாறு கிளம்பும் போது இத்தனை நாட்களும் அனைவரிடமும் நட்பு பாராட்டியிருந்தமையால் ஊரில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் சென்று சொல்லிவிட்டுத்தான் சென்றாள் தனபாக்கியம். போய் வருகிறேன் என்று சொல்லும் ஓர் உயரிய பண்பு அனைவரும் கடைபிடிக்க வேண்டிய பண்பு. அதனை ஒடுக்கப்பட்ட சமுதாயம் எவ்வளவு சிக்கலில் வாழும்போதும் கைவிடாமல் கடைப்பிடித்து வருவதை இதில் அறியமுடிகிறது. 'வரங்க்கா', போய்ட்டு வரம்மா, ஆயா நான் போறேன். என் சாமியே போனதுக்கப்புறம் இந்தூர்ல எனக்கென்னா வேல? என்று எல்லோரிடமும் சொல்லிக் கொண்டாள் (Arumugam, 2020).

மான உணர்ச்சியோடு வாழும் உயரிய தன்மையைப் பல இடங்களில் நாவலில் நம்மால் இனங்காண முடியும்.

வானகம் கையுறினும் வேண்டார் விழுமியோர்

மானம் அழுங்க வரின் எல்லாவற்றையும் விட மேன்மையானது மானம் எனக் கருதி வாழ்ந்த தமிழ்ச் சமூகத்தில் ஒடுக்கப்பட்டோர் அதைக் கைக்கொண்டே வாழ்ந்தார்கள் என்பதைத் தனபாக்கியம், தனபாக்கியத்தின் அப்பா, ஆறுமுகம் மூலமாகச் சரியாக அறியமுடிகிறது (Sivasankaran, 2003). தான் தவறு செய்யாதபட்சத்திலும், தன் மகன் தவறாக நினைத்திருப்பான் என்ற புரிதலோடே, தன் மகனை ஒருமுறை இறுதியாகப் பார்த்துவிட்டு இறந்துவிட வேண்டும் என நினைத்து அதைப் போல தன் உயிரையும்

மாய்த்துக்கொண்டாள் தனபாக்கியம். இங்கு தனபாக்கியம் ஒருவர் என்று நினைத்துக் கொள்வதற்கில்லை. பலர் இப்படி உயிரை மாய்த்துக்கொள்கிறார்கள் என்பதற்கான ஒரு எடுத்துக்காட்டே இது.

## பழக்க வழக்கங்கள்

பழக்கவழக்கம் என்பது சமூகத்துக்குச் சமூகம், குழுவுக்குக் குழு வேறுபாடுகளை உடையதாக இருக்கும். பெரும்பாலும் மரபுத் தொடர்ச்சியாகப் பயன்படுத்தி வரும் நல்ல பழக்கவழக்கங்கள் பின்பு பண்பாடாகிவிடும். ஒரு படைப்பில் இனவரைவியல் எவ்வளவிற்கு இடம்பெறுகின்றதோ அவ்வளவிற்கு அது எதார்த்த தன்மையைப் பெறும் என்று கருதலாம். இந்த அடிப்படையில் நாவலில் வரும் பல்வேறு பழக்கவழக்கங்கள் நாவலை எதார்த்த தன்மையோடு காட்டுவதையும் உணரலாம் (Stephen, 2017).

சந்தையிலிருந்து வீட்டிற்கு வரும்போது தின்பண்டங்கள் ஏதாவது வாங்கிவரும் பழக்கம், வெளிப்படையாகப் பேசும் குணம், அதுவும் தன் சொந்த பிள்ளை பற்றி நேர்மறை, எதிர்மறையான கருத்துக்களைப் பேசுதல், இயல்பாகப் பேசும் பேச்சு, பிறருக்குக் கேவலாகப் பேசுவது போலவும், கோபமாகப் பேசுவதாகத் தெரிந்தாலும் அதற்குள் அன்பின் ஆணிவேர் இருக்கும் அளவில் பேசுதல், ஆணையிடும் பழக்கம், கணவனைப் பிற சொற்களைச் சொல்லி அழைக்கும் வழக்கம், பாலியலைப் பற்றி எதுவும் தெரியாமலேயே பிள்ளைகளை வளர்த்திருந்த முறை, ஒருவர் இறந்த போது அந்த இழப்பின் கொடிய வலியை உணர்வோடு தன்னை அறியாமல் ஒப்பாரிப் பாடலாகப் பாடுவது போன்ற பழக்க வழக்கங்கள் இந்நாவலில் காணக்கிடக்கின்றன.

## முடிவுரை

ஆறுமுகம் நாவலை ஆராய்ந்து பார்க்கும் போது இது மானிடவியல் மற்றும் அதன் உட்கூறான இனவரைவியல் கூறுகளோடு கட்டமைக்கப்பட்டிருப்பதை உணர இயலுகிறது. நாவலில் ஊடே நுட்பமாக ஊடுருவிச் செல்லும் போது பொருளாதாரச் சுரண்டல்களினால்தான் அவர்கள் பெருமளவு இன்னல்களுக்குத் தொடர்ந்து ஆளாகி வருகின்றனர் என்பதையும் உணர முடிகிறது. மேலும் அவர்கள் கைக்கொள்ளும் பண்பாடுகள், பழக்கவழக்கங்கள் வழியாக நுணுகிச் செல்லும் போது ஒவ்வொரு இடத்திலும் அவர்களின் உணர்வுகளை நுட்பமாக நம்மாலும் உணர்ந்துகொள்ள முடிகிறது. இந்த நாவலை இன்னும் சமூக நோக்கில் ஆழமாக ஆய்ந்து பார்த்தால் ஒடுக்கப்பட்ட சமூக மக்களின் மேம்பாட்டுக்கு அந்த ஆய்வு உதவுவதாகவும் இருக்கும்.

## References

Arumugam, (2020) Imayam, Cre – A Publication, Chennai, Tamil Nadu, India.

Bhagthavathsala Bharathi, (2013) Varalaattu Maanidaviyal, Adayalam Veliyeedu, Tiruchy, Tamil Nadu, India.

Pandiyan, A., (2019) Vallinam, Eru maatha kalai elakkiya ethal, March-1, 2019, vallinam.com.my

Sivasankaran, Va., (2003) Naladiyar Nayavurai, Pothigai Pathippagam, Chennai, Tamil Nadu, India.

Somasundaranar, Po, Ve., (2007) Kuranthogai, Thirunelveli, Thennaidiya Saivasidantha Noorpathippu kalagam, Limited, Chennai, Tamil Nadu, India.

Stephen, G., (2017), Elakkiya Inavaraiviyal, New Century Book House Pvt. Ltd, Chennai – 600098, Tamil Nadu, India.

Thevaneya Paavaanar, Gna., (2009) Pandai Tamil Nagarigamum Panpaadum, Poombugar Pathippagam, Chennai – 600018, Tamil Nadu, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

### About the License:

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License